செ. கு. எண்: 039 நாள் : 14.07.2015

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – **14.7.2015**

**1)** தேனி மாவட்டத்திலுள்ள **வைகை அணையிலிருந்து** பெரியாறு பாசனப் பகுதியில் உள்ள இருபோக பாசன நிலங்களின் முதல் போக பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, பெரியாறு பாசனப் பகுதியில் உள்ள இருபோக பாசன நிலங்களின் முதல் போக பாசனத்திற்கு வைகை அணையிலிருந்து **15.7.2015 முதல்** தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், திண்டுக்கல் மற்றும் மதுரை மாவட்டங்களில் உள்ள **45,041 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதையும்;

2) திருப்பூர் மாவட்டத்திலுள்ள **அமராவதி அணையிலிருந்து** பழைய ஆயக்கட்டு பாசனப் பகுதிகளுக்கு பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடக் கோரி அமராவதி பழைய ஆயக்கட்டு பாசன விவசாயிகள் சங்கத்தினர் மற்றும் வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, திருப்பூர் மாவட்டம், அமராவதி அணையிலிருந்து பழைய ஆயக்கட்டு பாசனப் பகுதிகளுக்கு **15.7.2015 முதல்** தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள **47,117 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதையும் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9